ஓய்வூதியச் சுற்றறிக்கை : 03/2015 (திருத்தம் V)

எனது இல: ஓய்வு/ சுற்றறிக்கை/ 2021
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2021.01.29

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்/ முப்படைத் தளபதிகள்,
மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள் மற்றும்
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் .

**ஓய்வுபெறும் அதே நாளில் ஓய்வூதிய நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தல்.**
**(ஓய்வூதிய விண்ணப்பங்களை இணையவழியூடாக (online) சமர்ப்பித்தல் )**

மேற்படி விடயம் தொடர்பாக 30.11.2020 ஆந் திகதி வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை இல 03/2015 (திருத்தம் IV) இன் 4 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் இரத்து செய்யப்படுகின்றதென அறிவிக்கப்படுகின்றது.

02. அத்துடன் மேற்படி சுற்றறிக்கையின் 3வது பந்தியின் பிரகாரம் 01.02.2021 ஆந் திகதி முதல் அனைத்து ஓய்வூதிய விண்ணப்பப்படிவங்களும் ஸ்கான் (Scan) செய்யப்பட்டு இணையவழியூடான (online) மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

03. ஓய்வூதியகோப்பு முன்னய முறையில் தயாரிக்கப்பட்டு, 3 மாத காலத்திற்குள் உரிய பிரதேச செயலாளரிற்கு அனுப்பப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

04. தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிப்பதன் மூலமும் துல்லியமாக ஓய்வூதிய விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதனூடாக தாமதங்களைத் தவிர்த்து, ஓய்வூதியருக்கு உரிய திகதியில் ஓய்வூதிய உரித்தை வழங்கும் நோக்கில் தொடர்ந்தும் தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது.

ஒப்பம்
ஏ. ஜகத் டி டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர் – த.த.த
2. பிரதமரின் செயலாளர் – த.த.த
3. அமைச்சரவை அமைச்சின் செயலாளர் – த.த.த
4. பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் – த.த.த
5. நிதி அமைச்சின் செயலாளர் – த.த.த
6. கணக்காய்வாளர் நாயகம் – த.த.த